Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 701/2024**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நதியா | ஜாதி | : | |
| க/பெ | : | நாராயணசாமி | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | போடிகாமன்வாடி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 31 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

(1,2, 5 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் போடிகாமன்வாடியில் உள்ள எனது கணவரின் வீட்டில் இருந்து வந்தேன். ஆஜர் எதிரிகள் ராமசாமி, வசந்தா ஆகியோர் எனது கணவரின் அப்பா, அம்மா ஆவார்கள். ஆஜர் எதிரி நல்லம்மா எனது கணவரின் தங்கை. எதிரி செல்வி எனது கணவரின் அக்கா , எதிரி வனிதா எனது கணவரின் தங்கை ஆவார்கள். கடந்த 10.06.2023 ஆம் தேதி இரவு 09.00 மணிக்கு நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டு, போடிகாமன்வாடியில் உள்ள எனது வீட்டிற்கு வந்தபோது என்னை எனது மாமனார் ராமசாமி, மாமியார் வந்தா, நாத்தனார்கள் செல்வி, வனிதா, நல்லம்மா ஆகியோர்கள் என்னை வீட்டிற்குள் நுழைய விடாமல் எப்படி அவுசாரி மகளே நீ வீட்டிற்குள் நுழைந்துவிடுவாய் என பார்த்துக்கொள்கிறோம் என திட்டி, வீட்டில் நுழைந்த என்னை பருப்புக் கட்டையால் மண்டை, முதுகு ஆகிய இடத்தில் எதிரிகள் அனைவரும் என்னை அடித்தார்கள். எனக்கு மண்டை உடைந்துவிட்டது. நீ எப்படி இந்த ஊருக்கும் இருந்துவிடுவாய் என்று பார்த்துக்கொள்கிறோம், உன்னை இந்த ஊருக்குள் இருக்க விடமாட்டோம் என்று சொல்லி எதிரிகள் என்னை அடித்தார்கள். நான் செம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் சேர்ந்தேன். தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இது காவல் நிலையத்தில் நான் சொல்ல சொல்ல காவலர் எழுதியது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1/PW.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் கணவருக்கும், உங்களுக்கும் திருமணம் ஆவதற்கு முன்பே உங்கள் கணவருக்கு மின்சார விபத்து ஏற்பட்டு இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் கணவருக்கு விபத்து ஏற்பட்டபோது எதிரிகள் தான் சென்னைக்கு அழைத்துச் சென்று நல்ல முறையில் பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். எதிரிகளின்

பராமரிப்பிலும், கவனிப்பிலும் தான் உங்கள் கணவருக்கு இரண்டு கைகளும் பொருத்தப்பட்டது என்றால் சரிதான். அங்கு என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும், திருமணத்திற்கு முன்பே நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

எதிரிகள் அனைவரும் அவர்களின் நகைகள், பணம் ஆகியவற்றை செலவு செய்து தான் உங்கள் கணவருக்கு கைகள் பொருத்தப்பட்டது என்றால் சரியல்ல, அரசு மருத்துவமனையில் தான் கைகள் பொருத்தப்பட்டது. போடிகாமன்வாடியில் உள்ள நபர்களை விசாரித்தால் தெரியும் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்த பிறகு நீங்கள் தனிக்குடித்தனம் சென்றுவிட்டீர்கள் என்றால் சரியல்ல, என் கணவரின் மருத்துவத்திற்கு தான் ஈரோடு, பெருந்துறையில் தனியாக வீடு எடுத்து தங்கியிருந்தோம்.

உங்களிடம் காட்டப்படும் புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல திண்டுக்கல் மருத்துவமனையில் வைத்து காவலர் எழுதினார். என்னால் அப்போது பதற்றமாக இருந்ததால் என்னால் எழுத முடியவில்லை. மேற்படி விபரம் போலிசாருக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த போலிசார் வந்து விசாரித்தார்கள் என்றால் செம்பட்டி போலிசார் வந்து விசாரித்தார்கள். நீங்கள் செம்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லும் புகார் என்ன ஆனது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும், அந்த புகார் கொடுத்துக்கொண்டிருக்கும் போதே மயக்கம் வந்துவிட்டது, எனவே என்னை மருத்துவமனையில் சேருமாறு அறிவுறுத்தினர். மயக்கம் வந்தது என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் சொன்னேன்.

மருத்துவமனைக்கு செல்லும்போது நீங்கள் சுயநினைவோடு இருந்தீர்களா என்றால் இல்லை, நான் மயங்கிய நிலையில் இருந்தேன். மருத்துவர் யாரிடம் கேட்டு விபரங்களை எழுதிக்கொண்டார் என்றால் என் கணவரை கேட்டு விபரங்களை எழுதிக்கொண்டார். சம்பவம் நடைபெறும் போது உங்கள் கணவர் உடன் இருந்தாரா என்றால் இருந்தார். பருப்பு கட்டையால் எதிரிகள் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை, அடித்தார்கள் என்று மட்டும் சொல்லியுள்ளேன். யார் பருப்புக்கட்டையை வைத்து அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் பதற்றத்தில் நான் சொல்லவில்லை.

யார் யார் என்ன என்ன வார்த்தையை சொல்லி திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எல்லாரும் திட்டினார்கள் என்று தான் சொல்லியுள்ளேன். யார் யார் உங்களை எங்கு எங்கு அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பதற்றமாக இருந்தேன் என்று புகாரில் நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் கொடுத்த புகாரில் எந்த தேதியில் எந்த இடத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நீங்கள் ஊருக்குள் வந்தால் உயிரோடு இருக்க விடமாட்டோம் என்று புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை.

உங்கள் கணவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அரசு வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார் என்றால் சரிதான், வார்டு மேனேஜராக பணியாற்றி வருகிறார். சாட்சி பின்னிட்டு தொகுப்பூதியத்தின் அடிப்படையில் என் கணவர் வேலை பார்த்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். உங்கள் கணவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வேலை செய்வதால், அந்த வேலையை பயன்படுத்தி நீங்கள் மருத்துவமனையில் சேர்ந்தீர்கள் என்றால் சரியல்ல. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் யாருடன் நீங்கள் சென்றீர்கள் என்றால் என் கணவரின் உறவினர் பிரதீப் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் திண்டுக்கல் மருத்துவமனைக்கு சென்றோம்.

நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விவதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், உங்கள் கணவரை அவரின் குடும்பத்தில் இருந்து பிரித்து அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக இந்த புகாரை பொய்யாக எதிரிகள் மீது கொடுத்து, பொய் சாட்சிகள் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உண்மையில் வழக்கு சம்பவம் நீங்கள் சொல்வது போல நடத்திருந்தால் யார் யார் எங்கு எங்கு உங்களை அடித்தார்கள் என்றும், யார் யார் என்ன என்ன வார்த்தையை சொல்லி திட்டினார்கள் என் குறிப்பிட்டு சொல்லியிருப்பீர்கள் என்றும், அவ்வாறு கூறாததால் நீங்கள் சொல்வது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் கொடுத்த புகாரில் யார் யார் இருந்தார்கள் என்றும், சம்பவத்தை பார்த்தார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 19/2020**

**Deposition of PW.6 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிச்சை | ஜாதி | : | |
| த/பெ | : | பழனியப்பன் | தொழில் | : | பம்ப் ஆப்பரேட்டர்,<br>சித்தையன்கோட்டை பேரூராட்சி |
| கிராமம் | : | சேடபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 60/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சேடபட்டியில் குடியிருந்து சித்தையன்கோட்டை நீரேற்று நிலையத்தில் ஆபரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு மாதம், தேதி நியாபகமில்லை. ஆத்தூர் டேம் சாலையில் உள்ள அப்பத்தா தோட்டம் அருகில் காலை 11.30 மணி சுமாருக்கு போலிசார் சாலை விபத்து சம்மந்தமாக படம் வரைந்துகொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து போடுமாறு கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.3/PW.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நிரேற்று நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் 100 மீட்டர் தூரம் இருக்கும். உங்களிடம் காட்டப்படும் வரைபடத்தில் டிபிஎஸ் வயல் தான் சம்பவம் இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் உங்களை விசாரித்தார்கள் என்றால் போலிசார் தான் விசாரித்தார்கள். எந்த நிலையில் உள்ள போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றால் சீருடை அணிந்திருந்தார்கள், யார் என்று தெரியவில்லை. உங்களுக்கு முன்பு சாட்சியம் அளித்த குமரேசனை தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1 சரவணக்குமாரை தெரியுமா என்றால் தெரியும். குமரேசனும், சரவணக்குமாரும் உங்கள் நண்பர் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor